# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை—600 032.
தொலைபேசி: 044—22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**********

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை—600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

**********

முறையீட்டு மனு எண்.142/2019/பே.1
ஆணை நாள்: 11-02-2020.

09.09.2019 நாளிட்ட "தினமலர் " நாளிதழ் செய்தி. -- இம்முறைமன்ற நடுவம் தாமாக முன்வந்து வழக்காக பதிவு செய்தது

செயல் அலுவலர்,
மாமல்லபுரம் பேரூராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம். -- எதிர் மனுதாரர்.

ஆணை.

09.09.2019 நாளிட்ட "தினமலர்" நாளிதழ் செய்தியில், காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரம் பேரூராட்சி தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்தியினை, 2014—ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 7 (1) ல் கண்டுள்ள அதிகாரத்தின்படி, இம்முறைமன்ற நடுவம் தாமாக முன்வந்து வழக்காக பதிவு செய்து, முறையீட்டு மனு எண். 142/2019 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிகைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

09.09.2019 நாளிட்ட தினமலர் நாளிதழ் செய்தியில், காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரம் பேரூராட்சியில் பூஞ்சேரி கூட் ரோடு பகுதியில் பல ஆண்டுகளுக்கு முன்னர் வீட்டு மனைகளுடன் உருவாக்கிய சிவகாமி நகர் வீட்டு மனைப்பிரிவில் , மொத்தப் பரப்பில் 10 சதவீதம் பொதுப் பயன்பாட்டிற்காக திறந்த வெளி இடமாக விடப்பட்டதை, பேரூராட்சி நிர்வாகத்தின் அலட்சியம் காரணமாக தனியார் இவ்விடத்தில் பாறைக் கற்களை கொட்டி ஆக்கிரமித்துள்ளதாக செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

04.11.2019 நாளிட்ட காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையில், காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரம் பேரூராட்சி, பூஞ்சேரி கிராமம், சிவகாமி நகர் மனைப்பிரிவில் (சர்வே எண். 9/A1, A3, மற்றும் 9/B, B3) பொது திறவிடத்தில் தனியார் ஆக்கிரமித்து சிலைகள் செய்யத் தேவையான பாறைகளை அதிக அளவில் சேமித்துள்ள நிலையில், அதனை அகற்ற அறிவிப்பு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, தற்போது கற்கள் அகற்றப்பட்டு வருவதாகவும், அனைத்துக் கற்களும் அகற்றப்பட்டு பொது திறவிடமானது பேரூராட்சியின் கட்டுப்பாட்டிற்கு கொண்டு வரப்படும் எனத் தெரிவித்து, முழுமையான அறிக்கையினை தனியே சமர்ப்பிப்பதாக தெரிவித்துள்ளார்.

23.12.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணைக்காக ஆஜரான மாமல்லபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் 04.11.2019 நாளிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ள விவரங்களை தெரிவித்துடன் முறைமன்ற நடுவ ஆணைகளின்படி, ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது தொடர்பான முடிவு

அறிக்கை மற்றும் பொதுத் திறவிடத்திற்கான சந்தை மதிப்பு குறித்த அறிக்கையினை இரு தினங்களுக்குள் சமர்ப்பிப்பதாக தெரிவித்துள்ளார்.

04.02.2020 நாளிட்ட மாமல்லபுரம் பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதத்தில் புகாருக்குட்பட்ட இடத்தில் இருந்த கற்கள் முழுமையாக அகற்றப்பட்ட நிலையில், பொதுத் திறவிடப் பகுதி நிலம் பேரூராட்சி மூலம் கையகப்படுத்தப்பட்டு, சுற்றிலும் வேலி அமைக்கப்பட்டு, தகவல் பலகை வைக்கப்பட்டுள்ளதாகவும், பேரூராட்சி மூலம் கையகப்படுத்தப்பட்ட பொதுத் திறவிடத்தின் தற்போதைய மதிப்பு வழிகாட்டு மதிப்பீட்டின்படி ரூ. 57,23,871/– (எழுத்தால் ரூபாய் ஐம்பத்து ஏழு லட்சத்து இருபத்து மூவாயிரத்து எண்ணூற்றி எழுப த்தி ஒன்று மட்டும்) எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கைகள் மற்றும் வாக்குமூலம் ஆகியன பரிசீலிக்கப்பட்டன. மாமல்லபுரம் பேரூராட்சி, பூஞ்சேரி கிராமம் சர்வே எண். 9/A1, A3 மற்றும் 9/B, B3 இடத்தில் அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கான 1585.86 சதுர மீட்டர் பொது திறவிடப் பகுதி (தற்போதைய சந்தை மதிப்பு ரூ.57,23,871/–) தனியாரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது பத்திரிக்கை செய்தி வாயிலாக கண்டறியப்பட்டு, இம்முறைமன்ற நடுவ நடவடிக்கைகளுக்குப் பின்னர் பேரூராட்சி மூலம் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு, மேற்படி பொதுத் திறவிடம் பேரூராட்சியின் கட்டுப்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டு பராமரிக்கப்படுகிறது. இது குறித்து பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையினை ஏற்று, இப்பொருள் தொடர்பான தொடர் நடவடிக்கையினை கைவிட முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது. எதிர்காலத்தில் இது மீண்டும் ஆக்கிரமிப்புக்குள்ளாகாமல் கண்காணிக்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

2020–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 11 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

ரு. பழனிவேல்

உதவிப் பதிவாளர்.

பெறுநர்

1.செயல் அலுவலர்,
மாமல்லபுரம் பேரூராட்சி,
காஞ்சிபுரம் மாவட்டம்.

2.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
காஞ்சிபுரம் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
காஞ்சிபுரம்.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலரின் தனி எழுத்தர்.
உதவிப் பிரிவு அலுவலர் (ஊராட்சிகள்)